

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 74/2017

தேதி : 21/08/2017

# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் அவர்களின் அறிக்கை

முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்களின் மறைவுக்குப் பிறகு, சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தில் ஏற்பட்ட பிரிவினை மறைந்து, இன்று மீண்டும் இணைந்திருப்பதை மகிழ்வோடு வரவேற்கிறேன்.

பிரிவு ஏற்பட்டதையும், மீண்டும் இணைந்ததையும் அ.தி.மு.க.-வின் உள்கட்சிப் பிரச்சனை என்று ஒதுக்கிவிடமுடியாது. ஏனென்றால் 2016 சட்டமன்ற பொதுத்தேர்தலில் மக்கள் புரட்சித்தலைவி தலைமையில் மீண்டும் நல்லாட்சி தொடரவேண்டும் என வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை அளித்தனர்.

அதனடிப்படையில், அந்த ஆட்சி முழுமையாக 5 ஆண்டு காலமும் நிலைத்திருந்தால் தான், மக்களின் தீர்ப்பை மதிப்பதாக இருக்கும்.

இதை வலியுறுத்தும் விதமாக, சமீபத்தில் நான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்து வந்த பிறகு இரு அணிகளின் இணைப்பின் அவசியம் குறித்து கருத்து தெரிவித்திருந்தேன்.

அ.தி.மு.க.-வின் கோடிக்கணக்கான தொண்டர்களின் ஏகோபித்த மகிழ்வோடும் மனநிம்மதியோடும் இன்று ஏற்பட்டிருக்கும் இணைப்பு, நூற்றாண்டு விழா காணும் புரட்சித்தலைவரின் கனவுகளையும், புரட்சித்தலைவி அவர்களின் நல்லெண்ணங்களையும் நிறைவேற்றி தமிழகத்தை வளர்ச்சிப்பாதையில் கொண்டுச்செல்லும் நல்லாட்சிக்கு பக்கபலமாக அமைய வேண்டும் என்ற எனது நம்பிக்கையையும், நல்வாழ்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624


மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதல்வர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு பன்னீர் செல்வம் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
தலைவர் - பொதுச்செயலாளர்


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017

No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.

தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com